SRI RAMACHANDRA UNIVERSITY
(Established under Section 3 of the UGC Act, 1956)

Porur, Chennai - 600 116.
Phone : 2476 8027, 31-33
Fax : 091-44-2476 5995
www.srmc.edu

**NEWS RELEASE**

# ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலையில் மகப்பேறு துறை அனைத்திந்திய பயிலரங்கம்

சென்னை,
1 பிப்ரவரி, 2010.

நாடெங்கிலிருந்தும், நேபாளத்திலிருந்தும் 400க்கும் மேற்பட்ட மகப்பேறு மருத்துவ துறை பட்ட மேற்படிப்பு மாணவர்கள் இன்று போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலையில் துவங்கிய ஒரு வார திறமை மேம்பாட்டு பயிரலங்கத்தில் பங்கு பெற்றனர். அப்போது பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ கல்லூரி மகப்பேறு மருத்துவத் துறையின் முதல் தலைவரும், இன்னாள் விஜயா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளையின் இயக்குனருமான பேராசிரியர் சாவித்ரி சுப்பிரமணியம், நல்ல பாட அறிவும், மருத்துவ மனையில் செய்த அரும் பணியும், பழகும் விதமும், நோயாளிகளுக்கு கனிவான சேவையும் செய்தால் மாணவர்கள் சிறப்பாக தேர்ச்சி பெறுவதோடு நல்ல மருத்தவராகவும் விளங்க முடியும் என்று கூறினார்.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசிய மகப்பேறு நுண்துளை அறுவை சிகிச்சை நிபுணரும் ஜோசப் நர்சிங் ஹோமின் இயக்குனருமான பேராசிரியர் A. குரியன் ஜோசப், நல்ல பண்புகளும் நோயாளிகளுக்கு மருத்துவ சேவை செய்வதில் உயர் தரத்தை தொடாந்து பேணுவதுமே, பட்ட மேற்படிப்பு மகப்பேறு நலத்துறை மாணவர்களின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

சிறப்பு விருந்தினர்களை வேந்தர் திரு. V. R . வெங்கடாசலம் கவுரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலையின் பலதுறைத்தலைவர் Dr. K. V. சோமசுந்தரம், இந்த பயிலரங்கம் மாணவர்களின் பாட அறிவையும், செயல் திறனையும் முனைப்பாக்கி, சிறந்த மகப்பேறு மருத்துவர்களாக உருவாக்க உதவும் என்று கூறினார்.

வரவேற்று பேசிய பல்கலைக்கழக மகப்பேறு துறை பேராசிரியர் Dr. ஜெயா விஜயராகவன் இப்பயிலரங்கில் சிக்கலான மகப்பேறு நல நிகழ்வுகளும் ஒவ்வொரு மாணவருக்கும் தனி பயிற்சிகளும் அளிக்கப்படும் என்று கூறினார்.

---------------------------------------------------

For more details please contact Dr.Jaya Vijayaraghavan, Professor, OG, SRU, 9840239891

T.G.Nallamuthu, Consultant, Media Relations, SRU – 9444265578, nallamuthu@hotmail.com